யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
FWC
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

01) ஆபிரகாமின் அழைப்பின் இரண்டு முக்கிய அம்சங்கள்
(1) நம்பிக்கை, அன்பு (2) தியாகம், சவால் (3) தியாகம், அன்பு
(4) நம்பிக்கை, தியாகம் (5) அன்பு, சவால்

02) இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஈசாக் மூலம் புதுப்பித்த இடம்
(1) பெத்தெல் (2) மம்பிறே (3) பெயர்செபோ
(4) கிதியோன் (5) சீனாய் மலையில்

03) திருவிவிலியம் ஒரு புனித நூலாகும் எனக் கூறியவர்
(1) புனித அம்புறோசியார்
(2) புனித சிறில்
(3) புனித அகுஸ்தினார்
(4) புனித கிளேமன்ட்
(5) புனித ஜெரோபோவாம்

04) பத்து பெரும் துன்பங்களில் ஏழாவது பெரும் துன்பம்
(1) தவளைகள் (2) காரிருள் (3) கொப்பளங்கள்
(4) ஈக்கள் (5) கல்மழை

05) கானான் நாட்டின் அறுவடை விழாவின் சாயலைக் கொண்டது
(1) புளிப்பற்ற அப்பவிழா (2) பாஸ்கா விழா (3) கூடார விழா
(4) மேய்ப்பர்களின் விழா (5) அறுவடை விழா

agaram.lk

06) மாசா, மெரிபா என்னும் எபிரேய சொற்களின் பொருள்கள் முறையே
(1) சோதித்தல், வாதாடுதல்
(2) போரிடுதல், வாதாடுதல்
(3) தாகம் உண்டாதல், கடத்தல்
(4) வாதாடுதல், கடத்தல்
(5) செபித்தல், சோதித்தல்

07) தூய பவுலின் மேய்ப்பு பணி பற்றிய திருமுகங்கள்
(1) 1, 2 கொரிந்தியர், கலாத்தியர்
(2) 1 - 2 திமொத்தேயு, தீத்து
(3) உரோமையர், கொரிந்தியர்
(4) கொலோசேயர், பிலமோன்
(5) 1 - 2 தெசலோனிக்கர், எபேசியர்

08) "இறுதி நாளில் எல்லோர் மீதும் என் ஆவியைப் பொழிவேன்" என இறைவாக்குரைத்த இறைவாக்கினர்
(1) எசாயா (2) எரேமியா (3) யோவேல்
(4) எசேக்கியேல் (5) நாத்தான்

09) யூதரின் தலைநகரம் என அழைக்கப்பட்டது
(1) யோர்தான் (2) கலிலியோ (3) பலஸ்தீனா
(4) எருசலேம் (5) யூதேயா



Scanned with CamScanner

10) A - கிரேக்க மொழி பேசுபவர்

B - யௌவன பண்பாட்டினர்

C - பெஞ்சமின் குலத்தைச் சேர்ந்தவர்

D - தர்சு நகரைச் சேர்ந்தவர்

இக்கூற்றுகளுக்கு பொருத்தமானவர்

(1) பேதுரு
(2) ஆபிரகாம்
(3) யாக்கோபு
(4) மோசே
(5) பவுல்

11) பவுலின் முதல் மறைத் தூதுப் பயணத்தின் பயணத் தோழர்

(1) திமொத்தேயு, தீத்து
(2) சீலா, திமொத்தேயு
(3) லூக்கா, சீலா
(4) பர்ணபா, யோவான், மாற்கு
(5) சீலா, பர்ணபா, யோவான்

12) எசாயா இறைவாக்கினரின் பெயரின் பொருள் என்ன?

(1) இறைவன் எம்மோடு
(2) யாவே உயர்த்துகின்றார்
(3) இறைவன் பலப்படுத்துகின்றார்
(4) அபிசேகம் செய்யப்பட்டவர்
(5) யாவே மீட்பராய் இருக்கின்றார்

13) திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு காட்சிகளுள் இறைவாக்கினர் எசாயா கண்ட காட்சி எது?

(1) சேராபீன்கள்
(2) உலர்ந்த எலும்புகள்
(3) புதுமையான உயிரினம்
(4) மாட்சிமிகு இறைகாட்சி
(5) தனிப்பட்ட அனுபவங்கள்

14) கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீனாவில் வாழ்ந்த சமயக் குழுக்கள்

1) பரிசேயர்
2) மறைநூல் அறிஞர்
3) மீனவர்கள்
4) மந்தை மேய்ப்பவர்கள்

(1) 1 உம் 4 உம்
(2) 2 உம் 4 உம்
(3) 1 உம் 2 உம்
(4) 3 உம் 4 உம்
(5) 1 உம் 3 உம்

agaram.lk

15) இறைவன் வாக்களித்த மெசியா யேசுவே எனக் கூறும் நற்செய்தி

(1) மாற்கு
(2) மத்தேயு
(3) லூக்கா
(4) யோவான்
(5) திருத்தூதர்பணி

16) வெள்ளப்பெருக்கில் இருந்து காப்பாற்றப்பட்ட நோவா இறைவனுக்கு நன்றி செலுத்துமுகமாக செலுத்தியது என்ன?

(1) காணிக்கை
(2) திருப்பலி
(3) பாவப்பரிகார பலி
(4) தூபம் காட்டுதல்
(5) எரிபலி

17) கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீன பிரதேசத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்த ஆளுநர்

(1) ஏரோது
(2) திருமுழுக்கு யோவான்
(3) அன்னா
(4) போன்தியூஸ்பிலாத்து
(5) மோசே

18) பலஸ்தீனாவின் பொது மக்கள் மீது உரோமையர் சுமத்திய வரிகள்

(1) ஆலயத்துக்கான வரி
(2) பேரரசுக்கான வரி
(3) ஆலயத்துக்கான வரி, உரோமைப் பேரரசுக்கான வரி
(4) அரசுக்கான வரி
(5) அரசர்களுக்கான வரி



Scanned with CamScanner

19) ஜெருசலேம் ஆலயம் எவ் அரசனால் கட்டப்பட்டது?
(1) தாவீது (2) சாலமோன் (3) ஒசேயா
(4) மோசே (5) பார்வோன்

20) உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாத சமயக் குழுக்கள்
(1) சதுசேயர் (2) பரிசேயர் (3) மறைநூல் அறிஞர்
(4) ஏரோதியர் (5) சமாரியர்

21) புனித லூக்கா நற்செய்தியில் குறிப்பிடப்படும் புகழ்ச்சிப் பாடல்கள்
A - மரியாவின் பாடல்
B - செக்கரியாவின் பாடல்
C - சிமியோனின் பாடல்
D - மிரியாமின் பாடல்
(1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B, C மட்டும்
(4) C, D மட்டும் (5) B, D மட்டும்

22) மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலம்
(1) கி.பி. 80 - 85 (2) கி.பி. 80 - 90 (3) கி.மு. 950 - கி.பி.100
(4) கி.பி. 64 - 66 (5) கி.பி. 60 - 72

23) யேசுவின் வாழ்வைப் பற்றிய தகவல்களில் மறுக்க முடியாத உண்மை "யேசு இறையரசை அறிவித்தார்" என்பது தான் எனக் கூறிய விவிலிய அறிஞர்
(1) ஜெரோம் (2) புல்ட்மான் (3) அகஸ்டின்
(4) ரெனியுஸ் (5) அத்தனாசியார்

24) இயற்கை சார்ந்த புதுமைகளில் ஒன்று
(1) நயீம் நகர சம்பவம்
(2) பெத்சாயிதா குள சம்பவம்
(3) இறந்தவர்களை உயிர்ப்பித்த சம்பவம்
(4) நோயாளிகளைக் குணமாக்கியது
(5) காற்றையும் கடலையும் அடக்குதல்

agaram.lk

25) பேதுருவின் மறுதலிப்பின் வழியாக
(1) யேசு இறைவனைச் சார்ந்தவரென்பதும் அவரது பணியையும் எடுத்துக் காட்டுகின்றது.
(2) யூதர்களின் அதிகாரத்தைக் காட்டுகின்றது.
(3) பேதுருவின் தலைமைத்துவத்தைக் காட்டுகின்றது.
(4) தன்னைத் தாழ்த்துவதைக் காட்டுகின்றது.
(5) திருத்தூதர்களின் தலைவன் என்பதைக் காட்டுகின்றது.

26) திருச்சபையின் முதல் பொதுச் சங்கம்
(1) எருசலேம் பொதுச்சங்கம்
(2) நிசேயா பொதுச்சங்கம்
(3) எபேசு பொதுச்சங்கம்
(4) கல்சிடோன் பொதுச்சங்கம்
(5) கொன்ஸ்சாந்து நோபிள் பொதுச்சங்கம்

27) பத்துப் பெரும் துன்பங்களின் நோக்கம் யாது?
(1) எகிப்தியரை அழிப்பது
(2) இறைவனின் அதிகாரத்தை பார்வோனுக்கு வெளிப்படுத்துவது
(3) இஸ்ராயேலரைப் பாதுகாப்பது
(4) இயற்கையை வெளிப்படுத்துவது
(5) பார்வோனின் மனதை மாற்றுவது



Scanned with CamScanner

28) "வழியில் அவர் நம்மோடு பேசி, மறை நூலை விளக்கும் போது நம் உள்ளம்
எரியவில்லையா?" இம் மேற்கோளுடன் தொடர்புடைய நிகழ்வு
(1) திபேரியாக் கடலருகே நடைபெற்ற சம்பவம்
(2) பெத்சதா குளத்தினருகில் நடைபெற்ற சம்பவம்
(3) எம்மாவுஸ் நிகழ்வின் போது
(4) தோமாவுக்கு காட்சி கொடுத்த போது
(5) ஓய்வுநாள் பற்றிய உரையாடலின் போது

29) "நீ யூதரின் அரசனா?" என யேசுவை விசாரணை செய்தவர்
(1) ஏரோது (2) தலைமைக்குரு (3) போர்வீரர்
(4) பிலாத்து (5) யூதமதத் தலைவர்கள்

30) எபேசு பொதுச் சங்கம் எப்பேதகத்திற்கு எதிராகக் கூட்டப்பட்டது?
(1) ஆரியப் பேதகம்
(2) இயுக்திக்கேய பேதகம்
(3) பெலாஜிய பேதகம்
(4) மனிக்கேயப் பேதகம்
(5) நெஸ்தோரியப் பேதகம்

31) தூய ஆவி பற்றிய கருத்துக்களை நாம் அதிகம் அறியக்கூடிய நற்செய்தி எது?
(1) மத்தேயு (2) மாற்கு
(3) லூக்கா (4) யோவான்
(5) திருத்தூதர்பணிநூல்

32) திருமுழுக்கு யோவானின் மரணத்தினால் கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய முக்கிய செய்
(1) நாம் எப்போதும் நீதி, நேர்மை உள்ளவர்களாய் வாழ்ந்து இறைவனுக்குச் சான்று பகர வேண்
(2) யாரையும் நம்பக் கூடாது
(3) மரணம் எம்மை ஒருநாள் இறைவனோடு இணைக்கும்
(4) கடவுளை நம்பியோர் கைவிடப்படார்
(5) பெண்கள் எப்போதும் பழிவாங்கும் எண்ணம் உள்ளவர்கள்

agaram.lk

33) உரோமைப் பேரரசனாக இருந்த அந்தோனி பியுஸ் என்பவருக்கு உண்மை மறையை விளக்
கிறிஸ்தவர்களை அநியாயமாக துன்புறுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டவர்
(1) புனித அத்தனாசியார்
(2) புனித ஜெறோம்
(3) புனித ஜஸ்ரின்
(4) புனித அகஸ்டின்
(5) அலெக்சாந்திரியா புனித சிறில்

34) "பத்ரோ ஆதோ" உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது
(1) போர்த்துக்கேய மன்னனுக்கும் கோவா மன்னனுக்குமிடையே
(2) போர்த்துக்கேய மன்னனுக்கும் உரோமைய திருத்தந்தைக்குமிடையே
(3) போர்த்துக்கேய மன்னனுக்கும் கொழும்பு ஆயருக்குமிடையே
(4) போர்த்துக்கேய மன்னனுக்கும் இங்கிலாந்து இளவரசனுக்குமிடையே
(5) போர்த்துக்கேய மன்னனுக்கும் ஐரோப்பிய மன்னனுக்குமிடையே

35) போர்த்துக்கேயரால் நிறுவப்பட்ட முதல் ஆலயம்
(1) புனித பேதுரு ஆலயம்
(2) புனித சவேரியார் ஆலயம்
(3) புனித செபஸ்ரியார் ஆலயம்
(4) புனித மரியாள் ஆலயம்
(5) புனித லவுறேஞ்யார் ஆலயம்



Scanned with CamScanner

36) "சின்ன உரோமை" எனக் கத்தோலிக்கத்திலும், விசுவாசத்திலும், ஒழுக்கத்திலும், வாழ்விலும் சிறந்து விளங்கிய இடம்

(1) கண்டி (2) மன்னார் (3) சில்லாலை
(4) கோட்டை (5) யாழ்ப்பாணம்

37) ஆரம்ப காலத்தில் திருத்தொண்டர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பிரதான பணி
(1) நற்செய்தியை எடுத்துரைத்தலும் திருமுழுக்கு அளித்தலும்
(2) நற்செய்தியை எடுத்துரைத்தலும் திருவழிபாட்டை நடாத்துதலும்
(3) அதிசயத்திற்குரியவற்றைச் செய்தலும் நோய்களை குணமாக்குதலும்
(4) சபைகளை நிறுவுதுலும், நம்பிக்கைக்குள் வாழ்க்கை நடாத்துதலும்
(5) பந்தியில் பரிமாறுதலும் அறப்பணிகளில் ஈடுபடுதலும்

38) தூய பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் அவருடன் கலந்து கொண்டவர்கள்
(1) பர்னபா, யோவான், சீலா
(2) சீலா, தீமோத்தேயு, லூக்கா
(3) யோவான், சீலா, லூக்கா
(4) தீமோத்தேயு, பர்னபா, யோவான்
(5) பிலிப்பு, தீமோத்தேயு, லூக்கா

39) "மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாகும்" எனக் கூறியவர்
(1) தூய எயுசேபியுஸ்
(2) அலெக்சாந்திரியாவின் ஆயர்
(3) தூய அத்தனாசியார்
(4) தூய தேர்த்தூலியன்
(5) கொன்ஸ்தாந்தின் பேரரசன்

40) 8ம் நூற்றாண்டில் ஜெர்மனிய திருத்தூதர் என விருது பெற்றவர்
(1) புனித போனிபஸ் (2) புனித பற்றிக்
(3) புனித றொமோல்ட் (4) புனித புறுனோ
(5) புனித பெனடிக்

41) இயுக்திக்கேய பேதகத்திற்கு மறுப்புத் தெரிவித்த பொதுச் சங்கம் எது?
(1) எருசலேம் (2) நிசேயா (3) திரிதெந்தின்
(4) வத்திக்கான் (5) கல்சிடோன்

42) புற இனத்தவர்கள் திருச்சபையில் சேர்வதற்கு ஏதுவாய் அமைந்த பிரதான காரணம்
(1) பெந்தக்கோஸ்து திருவிழா
(2) யூத சடங்கு முறைகளினதும் சட்டங்களினதும் தாக்கம்
(3) பழைய யூதமத அனுட்டானங்கள்
(4) நூற்றுவத் தலைவனான கொர்னேலியுவின் மனமாற்றம்
(5) கிறிஸ்து யேசுவில் கொண்ட நம்பிக்கை

43) ஆசிரியர்களை பயிற்றுவிக்க ஆசிரிய பயிற்சி கலாசாலையை ஆரம்பித்தவர்கள்
(1) யேசு சபையினர்
(2) அகுஸ்தினர் சபையினர்
(3) பிரான்சிஸ்கன் சபையினர்
(4) கார்மேல் சபையினர்
(5) டோமினிக்கன் சபையினர்



agaram.lk

Scanned with CamScanner

44) அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில்

(1) விண்ணரசு அவர்களுக்குரியது

(2) அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்

(3) அவர்கள் ஆறுதல் பெறுவர்

(4) அவர்கள் நிறைவு பெறுவர்

(5) அவர்கள் கடவுளைக் காண்பர்

45) அன்பின் உன்னத நிலை பற்றிய பவுல் சிறப்பாக எடுத்துரைக்கும் பகுதி காணப்படும் திருமுகம்

(1) கொரிந்தியர் (2) எபேசியர் (3) கலாத்தியர்

(4) பிலிப்பியர் (5) உரோமையர்

46) பிலிப்பியர் திருமுகத்தில் 2 : 5 - 11 ல் கிறிஸ்து யேசுவின் வாழ்க்கையில் வெளிப்படையாகக் காணக்கூடிய பண்பாக எடுத்துக்காட்டப்படுவது

(1) ஏழ்மையும் கீழ்ப்படிவும்

(2) தாழ்மையும் அன்பும்

(3) பரிசுத்த தனமும் கீழ்ப்படிவும்

(4) தாழ்மையும் கீழ்ப்படிவம்

(5) மனமாற்றமும் விசுவாசமும்

47) யேசு சீடர்களின் காலடிகளைக் கழுவிய சம்பவம் எந்த நற்செய்தியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) மத்தேயு (2) யோவான் (3) மாற்கு

(4) திருத்தூதர்பணி (5) லூக்கா

48) கிரேக்க சபைத் தந்தையர்களில் ஒருவர்

(1) புனித அம்புறோஸ்

(2) புனித ஜஸ்ரின்

(3) புனித ஜெரோம்

(4) புனித இரோணிமுஸ்

(5) புனித பசில்

agaram.lk

49) திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்திருந்த காலம்

(1) எட்டாம் நூற்றாண்டு

(2) ஆறாம் நூற்றாண்டு

(3) பத்தாம் நூற்றாண்டு

(4) ஐந்தாம் நூற்றாண்டு

(5) முதலாம் நூற்றாண்டு

50) புரட்டஸ்தாந்து சீர்திருத்த முன்னேற்றத்தைத் தொடங்கியவர்

(1) மாட்டின் லூத்தர்

(2) கல்வின்

(3) சுவிங்கின்

(4) எட்டாவது ஹென்றி அரசன்

(5) பதின்மூன்றாம் பத்திநாதர்

(50 × 2 = 100 புள்ளிகள்)



Scanned with CamScanner

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி - I

01) (i) ஐந்நூலின் முக்கிய கருத்துக்கள் நான்கு தருக.

(ii) இறைஏவுதல் இறைவனின் கொடை என்பதற்கு நான்கு எடுத்துக்காட்டுக்கள் தருக.

(iii) இணைத் திருமுறை நூல்கள் நான்கு தருக.

(iv) விடுதலைப் பயணத்தோடு தொடர்புடைய முக்கிய சம்பவங்கள் நான்கு தருக.

(v) நீதித் தலைவர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

02) (i) யாவே (J) பாரம்பரியத்தின் அமைப்பு முறைகள் நான்கு தருக.

(ii) உண்மை இறைவாக்கினரை இனங்காண்பதற்கான அளவு கோள்கள் நான்கு தருக.

(iii) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுவான பண்புகள் நான்கு தருக.

(iv) இறையரசின் அடையாளங்கள் புதுமைகள். யேசுவின் புதுமைகளின் இயல்புகள் நான்கு தருக.

(v) மாற்கு நற்செய்தியாளர் "கிறிஸ்து யூதரின் அரசர்" என வெளிப்படுத்தும் முக்கிய நான்கு சம்பவங்களைக் குறிப்பிடுக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

03) (i) உயிர்த்த யேசு காட்சி கொடுத்த நான்கு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(ii) எருசலேம் பொதுச் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நான்கு தருக.

(iii) தூய பவுல் இரண்டாம் தூதுரைப் பயணத்தின் போது தரிசித்த இடங்கள் நான்கு தருக.

(iv) ஆரம்ப காலங்களில் நடைபெற்ற திருச்சங்கங்கள் நான்கு தருக.

(v) இலத்தீன் சபைத் தந்தையர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

(5 × 4 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) அ) பெந்தக்கோஸ்து தினத்தன்று தூயாவியின் வருகை பற்றி விளக்குக.

ஆ) தூய ஆவியைப் பெற்றுக் கொண்ட திருத்தூதர் செயற்பட்ட விதத்தைக் குறிப்பிட்டு, தூய ஆவியை பெற்றுக் கொண்ட நீரும் எவ்வாறு செயற்படுவீர் என விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

05) அ) செங்கடலைக் கடத்தல் தொடர்பாக நிலவும் பல்வேறு கருத்துக்களில் ஐந்து காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

ஆ) ஈசாக்கை பலியிடச் சென்ற நிகழ்வின் வழியாக உமது வாழ்வுக்கு கிடைக்கும் செய்தியினை 5 காரணிகளின் துணையுடன் விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

06) அ) மத்திய காலத்தில் திருச்சபை பிளவுபட்டதற்கான காரணத்தை ஐந்து விடயங்கள் மூலம் விளக்குக.

ஆ) மாட்டின் லூத்தரின் வாதத்தில் காணப்படும் கருத்துக்கள் ஐந்தினை விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

07) அ) யோசவாஸ் அடிகளார் இலங்கையில் ஆற்றிய அர்ப்பணிப்பான பணியினை விளக்குக.

ஆ) இன்று திருச்சபை எதிர்நோக்கும் சவால்கள் மத்தியில் நீர் எவ்வாறு மறைபரப்பு பணியில் ஈடுபடுவீர் என விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

08) அ) நிசேயா பொதுச்சங்கம் கூட்ட ஏதுவான காரணத்தை விளக்குக.

ஆ) நிசேயா பொதுச் சங்கத்தை கூட்டியதால் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்பார்ப்பு எவ்வாறு கைகூடியது என்பதனை விளக்குக.

(2 × 10 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

Term Examination, March - 2016

FWC

| கிறிஸ்தவம் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## கிறிஸ்தவம் – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 11) | 4 | 21) | 3 | 31) | 4 | 41) | 5 |
| 02) | 3 | 12) | 5 | 22) | 4 | 32) | 1 | 42) | 4 |
| 03) | 4 | 13) | 1 | 23) | 2 | 33) | 3 | 43) | 3 |
| 04) | 5 | 14) | 3 | 24) | 5 | 34) | 2 | 44) | 2 |
| 05) | 1 | 15) | 2 | 25) | 1 | 35) | 5 | 45) | 1 |
| 06) | 1 | 16) | 5 | 26) | 1 | 36) | 3 | 46) | 4 |
| 07) | 2 | 17) | 4 | 27) | 2 | 37) | 5 | 47) | 2 |
| 08) | 3 | 18) | 3 | 28) | 3 | 38) | 2 | 48) | 5 |
| 09) | 4 | 19) | 2 | 29) | 4 | 39) | 4 | 49) | 3 |
| 10) | 5 | 20) | 1 | 30) | 5 | 40) | 1 | 50) | 1 |

## கிறிஸ்தவம் – II

### பகுதி I

01) (i)
1. குலமுதுவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி
2. எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டல்
3. பாலைவனத்தில் இறைபராமரிப்பு
4. சீனாய் உடன்படிக்கை
5. வாக்களிக்கப்பட்ட நாட்டை உரிமையாக்கிக் கொள்ளல்

(ii)
1. இறைவனின் மூச்சு / உயிருள்ளது
2. உயிர்ப்பாற்றல் வாய்ந்ததாகும்
3. செயற்படச் செய்வதாகும்
4. வழிகாட்டுவதாகும்
5. பணியாற்றச் செய்வதாகும்
6. கண்ணுக்குப் புலப்படாத சக்தி ஆகும்
7. வாழச் செய்வதாகும்
8. ஊக்குவிப்பதாகும்

(iii) தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம்,
பாருக், மக்கபேயர் 1, மக்கபேயர் 2

(iv)
1. செங்கடலைக் கடத்தல்
2. பாறையிலிருந்து தண்ணீர் வருதல்
3. உணவு வழங்குதல்
4. பத்துக் கட்டளைகள்
5. உடன்படிக்கை
6. வெண்கலப் பாம்பு
7. மோசேயின் இறப்பு
8. வாக்களிக்கப்பட்ட நாட்டை உரிமையாக்கிக் கொள்ளல்



agaram.lk
Scanned with CamScanner

(v) 1. தெபோரா
2. கிதியோன்
3. சிம்சோன்
4. எஸ்தர்

02) (i) சாதாரணமானது, விளக்கமானது, பல்வேறு தன்மையைக் கொண்டிருக்கும், நாடகப் பாணியும் பண்பாடும் இலக்கிய நடையும் ஆகியவற்றைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

(ii) 1. சோதிடம், குறிசொல்லுதல் என்பவற்றைத் தவிர்த்தல்
2. சாபங்கள் நிறைவேற்றப்படுதல்
3. நேர்மையும் துணிவும் உடையவர்கள்
4. இறைவாக்கு யாவும் உடன்படிக்கையோடும், பத்துக்கட்டளையோடும் தொடர்புடையவை

(iii) 1. காட்சி அல்லது சிறப்பு அனுபவம்
2. அழைப்பும் பொறுப்புக் கொடுத்தலும்
3. விருப்பமின்மையை வெளிப்படுத்தல்
4. தைரியப்படுத்தல்
5. அனுப்பப்படுதல்

(iv) 1. இவை நம்பிக்கையின் அடிப்படையில் செயற்பட்டவை
2. இவற்றின் வழியாக யேசு தமது சுய இயல்பை வெளிப்படுத்தினார்
3. இறையாட்சி உருவாவதை நினைவுபடுத்துகின்றது.
4. இறைவனின் இரக்கமும் கருணையும் மனிதருக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

(v) 1. ஏளனம் செய்தல்
2. ஆணி அறைதல்
3. மரணித்தல்
4. அடக்கம் செய்தல்

agaram.lk

03) (i) 1. மகதலா மரியாவுக்குத் தோன்றுதல்
2. சீடர்களுக்குத் தோன்றுதல்
3. தோமாவுக்குத் தோன்றுதல்
4. திபேரியாக் கடலருகே சீடர்கள் ஏழு பேருக்குத் தோன்றுதல்

(ii) 1. இன்றியமையாதவற்றைத் தவிர வேறு எந்தச் சுமையையும் புறவினத்தவர்கள் மேல் சுமத்தக் கூடாது.
2. சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றை தவிருங்கள்
3. மிருக இரத்தத்தைத் தவிருங்கள்
4. கழுத்து நெரிக்கப்பட்டு செத்ததின் இறைச்சியைத் தவிருங்கள்
5. பரத்தமையைத் தவிர்த்தல்

(iii) சீரியா, சிலிசியா, தேர்பே, லிஸ்திரா, துரோவா,
பிலிப்பி, தெலோணிக்கா, பெரேயா, எதென்ஸ், கொரிந்து

(iv) 1. நிசேயா பொதுச்சங்கம் (கி.பி. 325)
2. கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம் (கி.பி. 381)
3. எபேசு பொதுச்சங்கம் (கி.பி. 431)
4. கல்சிடோன் பொதுச்சங்கம் (கி.பி. 451)

(v) புனித இரோணிமுஸ், புனித அம்புறோஸ், புனித அகஸ்டின், புனித ஜெரோம்,
புனித ஜஸ்டின், புனித பெரியகிறகோரி, புனித சிறில்



Scanned with CamScanner

## பகுதி II

04) அ) (தி.ப. 2 : 1 - 13) பெந்தக்கோஸ்து தினத்தன்று தூய ஆவியானவரின் வருகை இடம்பெற்றது. கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் உண்டாகி வீடு முழுவதும் ஒலித்தது. நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து தங்கின. அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். யேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்றதை அவருடைய செயற்பாடுகள் உறுதிப்படுத்தின.

படிப்பறிவில்லாத கலிலேயர் அயல் மொழிகளில் பேசியது, யூதர்களுக்கு பயந்து பூட்டிய அறையில் ஒழிந்திருந்த சீடர்கள் துணிவு பெற்று வெளியே வந்து மக்கள் முன்னிலையில் அச்சமின்றி போதித்தனர்.

பேதுரு ஆற்றிய உரையின் மூலம் ஏறக்குறைய 3000 பேர் இயேசுவில் விசுவாசம் கொண்டு திருமுழுக்குப் பெற்று திரச்சபையில் சேர்ந்தனர்.

ஆ) - தூய ஆவியைப் பெற்ற படிப்பறிவில்லாத திருத்தூதர்கள் அயல்மொழிகளில் பேசினர்.
- யூதர்களுக்கு பயந்து பூட்டிய அறையில் ஒழிந்திருந்த சீடர்கள் துணிவு பெற்றனர்.
- மக்கள் மத்தியில் அச்சமின்றி போதித்தனர்.
- அரும் அடையாளங்கள் செய்தனர்.

இவ்வாறு குறிப்பிட்டு தமது செயற்பாட்டையும் விளக்கி எழுதியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்

05) அ) - இஸ்ராயேல் மக்கள் செங்கடலின் அருகில் செல்லவில்லை
- மத்திய தரைக் கடலுக்கு அண்மையிலுள்ள கடலேரியான சிறிபோனிஸ் ஏரி திசையை நோக்கி பயணம் செய்திருத்தல்
- மபீஷா ஏரிப் பிரதேசத்தில் சதுப்பு நிலப்பகுதிக்கு அவர்கள் சென்றிருக்கலாம்.
- ஏரிப் பிரதேசத்தில் உண்டாகும் வற்றுப் பெருக்கு சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம்.
- இஸ்ராயேல் மக்கள் இறைவனின் உதவியால் மீட்கப்பட்டனர்.

ஆ) மாணவரின் விடைக்கு ஏற்ப 10 புள்ளிகள் வழங்கவும்.

06) அ) - மத்திய காலத்தில் பல்வேறு புதிய சமய இயக்கங்கள் தோன்றியமையால் சமூக, பொருளாதாரப் பிரிவுகளில் ஏற்பட்ட நகரமயமாக்கல், மற்றும் வணிக வாதம், பணப் பயன்பாடு, அச்சுக்கலை, இயந்திரக்கலை, மத்திய வர்க்கத்தின் உதயம், அடிக்கடி உருவாகிய விவசாயக் கழகங்கள், மறுமலர்ச்சி, சிந்தனைப் புரட்சி ஆகிய அனைத்துப் பிரிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியமை.
- அரசியல் மாற்றமாக உலக அரசியல் மத்திய யுகத்தில் தேசிய அரசு தொடர்பான கருத்துக்கள் பரவத் தொடங்கியமை
- உலக அரசியல் இராணுவ நிர்வாக சட்டங்களுடைய் சுயாதீன முயற்சி இக்காலத்தில் இருந்தமை.
- திருச்சபைக்கும் அரசிற்குமிடையே நிலவிய தொடர்புகள்
- புதிய நடுத்தர வர்க்கத்தினர் உருவாகியமை
- குருக்களின் மத்தியஸ்தம் தேவையில்லை என்ற கருத்து தோன்றியமை



agaram.lk
Scanned with CamScanner

ஆ) - திருவிவிலியத்திற்கு முதலிடம் கொடுத்தல்

- ஒருவர் மீட்பைப் பெற்றுக் கொள்வது அவர் செய்த புண்ணியங்களினால் அல்ல. இறைவனுடைய கொடையாகிய இரக்கத்தினாலாகும்.
- ஜென்ம பாவத்தினால் எல்லா மனிதரும் பாவத்தின் அடிமையாவான்
- மீட்பு கிடைப்பது விசுவாசத்தினால் மட்டும்
- கிறிஸ்தவ வாழ்வின் மையம் திருவிவிலியம்
- அருளடையாளங்கள் ஏழு அல்ல இரண்டு ஆகும்.
- ஆராதனச் சடங்குகள் மக்களின் சொந்த மொழியில் நிறைவேற்றப்பட வேண்டும்.

07) அ) - ஒல்லாந்தரிடமிருந்து கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க கோவாவிலிருந்து மாறுவேடம் பூண்டு மன்னாரில் வந்திறங்கினார்.

- கழுத்தில் செபமாலை அணிந்து கொண்டு பிச்சைக்காரனைப் போல வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்டு இடையிடையே சிலுவை அடையாளம் வரைந்து செபமும் சொல்லிக் கொண்டு பிச்சை கேட்டு வந்தார்.
- யாழ்ப்பாண மக்கள் இவரை இனங்கண்டு சந்தோசமடைந்தனர். அங்கு 30 வருடங்களின் பின் மூப்பர் ஒருவரின் வீட்டில் திருப்பலி வைத்தார்.
- பின் இங்கு இருப்பது ஆபத்து என அறிந்து சில்லாலைக்குச் சென்றார்.
- அங்கு மூப்பர் வீட்டில் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். அவ்வீடே அடிகளால் இலங்கையில் ஆரம்பித்த அரும்பெரும் ஆன்மீகப் பணியின் நடுநிலையாக அமைந்தது.
- தமிழ் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுத்து திருவருட்சாதனங்களை வழங்கினார்.
- அடிகளார் கொடுத்த விசுவாசத்தினால் மக்களும் மனம் தளராமல் வாழ்ந்தனர்.

இதுபோன்ற கருத்துக்கள் எழுதியிருப்பின் 10 புள்ளிகள் வழங்குக.

ஆ) மேற்குறிப்பிட்ட பணிகளின் அடிப்படையில் இன்று திருச்சபை எதிர்நோக்கும் சவால்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்கினால் 10 புள்ளிகள்

agaram.lk

08) அ) நிசேயா பொதுச்சங்கம் கூட்டப்பட ஏதுவான காரணம் ஆரிய பேதகம்

கிறிஸ்து இறைவனின் படைப்பு கிறிஸ்துவில் இறைசாயல் இல்லை. இறைவனின் இறைத் தத்துவத்தை வேறொருவருக்கு அளிக்க முடியாது. கிறிஸ்து இறைவனிலும் கீழானவர் என்பதே இப்பேதகமாகும்.

இப்பேதகம் பரவி வளர்ச்சியடையவே இப்பேதகத்தின் பரவலைத் தடை செய்யவே இச்சங்கம் கூட்டப்பட்டது.

இவ்வாறான கருத்துக்கள் விளக்கி எழுதினால் 10 புள்ளிகள்

ஆ) - ஆரிய பேதகத்தின் தப்பறையான கருத்துக்கள் மறுக்கப்பட்டு சரியான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.

- விசுவாச சத்தியங்களை ஒன்று திரட்டி "விசுவாசப் பிரமாணம்" ஒன்றைத் தொகுத்தனர். இவ் விசுவாசப் பிரமாணமே இன்றைய திருப்பலியில் சொல்லப்படுகிறது.
- இச்சங்கம் இயேசுக்கிறிஸ்து பிதாவிற்கு சரிசமமானவர் என்றும், பிதாவோடு ஒரே பொருளானவர் என்றும் அறிக்கை செய்தது. இது விசுவாச உண்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(10 புள்ளிகள்)



Scanned with CamScanner